# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,924/2—1970 සැප්තැම්බර් 20 වැනි ඉරිදා — 1970.9.20**

14,924/2 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது.)


# பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை (அரசமைப்பு) அரசவைக் கட்டளை—1946

61 ஆம் பிரிவின் கீழான கட்டளை

இலங்கை (அரசமைப்பு) அரசவைக் கட்டளை, 1946 இன் 61 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழுவினுல் பிறப்பிக்கப்பட்ட கட்டளை.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

கொழும்பு,
1970, செற்றம்பர் மாதம் 19 ஆந் தேதி.

### 197 ஆம் கட்டளை

இதனகத்துள்ள பட்டோலையின் I ஆம் பத்தியில் குறிப்பிட்டுள்ள அதிகாரங்கள் அப்பட்டோலையின் II ஆம் பத்தியின் நேரொத்த பதிவில் குறிப்பிட்டுள்ள உத்தியோகத்தர்களுக்குப் பின்வரும் நிபந்தனைகட்கமைவாய் இத்தால் கையளிக்கப்படுகின்றன :

(அ) அரசாங்க சேவை ஆணைக்குழு காலத்துக்குக் காலம் வழங்கும் அத்தகைய அறிவுறுத்தல்களுக்கிணங்க அவ்வதிகாரங்கள் பிரயோகிக்கப்படல் வேண்டும் ;

(ஆ) இக்கட்டளையின் கீழ் அதிகாரம் கையளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தர் அத்தகைய அதிகாரத்தின் கீழ் செய்யும் தீர்மானம் எவரொருவருக்கும் திருப்தியளிக்காவிடின் அன்னார் அதற்கெதிராக அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம் ;

(இ) அத்தகைய உத்தியோகத்தருக்குக் கையளிக்கப்பட்ட தண்டனையிடும் அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினுல் பிரயோகிக்கப்படல் வேண்டுமென அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானிக்கும் எவ்விடயத்திலும் அத்தகைய உத்தியோகத்தர் அவ்விடயத்தில் அவ்வதிகாரத்தைப் பிரயோகிக்கலாகாது.

2. இக்கட்டளையிலுள்ள எவையேனும் இலங்கை (அரசமைப்பு) அரசவைக்கட்டளை 1946 இன் 61 ஆம பிரிவினுல் அளிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையை எவ்வகையிலும் தாழ்த்துவதாக அல்லது எவ்வகையிலும் பாதிப்பதாகக் கருதப்படவோ பொருள் கொள்ளப்படவோ ஆகாது.

3. இலங்கை (அரசமைப்பு) அரசவைக் கட்டளை 1946 இன் 61 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1955 ஆம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 7 ஆந தேதிய இல. 10,847 ஐக் கொண்ட செய்திமடலில் வெளியிடப்பட்ட 83 ஆம் இலக்கக் கட்டளை எவ்வாறிருந்த போதிலும் இக்கட்டளை பயன்படல் வேண்டும்.

4. இலங்கை (அரசமைப்பு) அரசவைக் கட்டளை 1946 இன் 61 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழுவினுல் ஏலவே கையளிக்கப்பட்டு காலத்துக்குக் காலம் செய்திமடலில் வெளியிடப்படும் தண்டனையளிக்கும் அதிகாரம் எதனையும் அல்லது இதனகத்துப் பின்னர் கையளிக்கப்படும் தண்டனையளிக்கும் அதிகாரமெதனையும் இக்கட்டளையிலுள்ள எவையும் எவ்வகையிலும் பாதிக்கமாட்டா.

5. இதனகத்துள்ள பட்டோலையின் 1 ஆம் இலக்க விடயத்தால் கையளிக்கப்பட்ட நியமன அதிகாரமானது இலங்கை (அரசமைப்பு) அரசவைக் கட்டளை 1946 இன் 61 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழுவினுல் ஏலவே கையளிக்கப்பட்டு காலத்துக்குக்காலம் செய்திமடலில் வெளியிடப்படும் நியமன அதிகாரத்தை அல்லது இதனகத்துப் பின்னர் கையளிக்கப்படும் நியமன அதிகாரம் எதனையும் எவ்வகையிலும் பாதிக்கமாட்டா.

6. இதனகத்துள்ள பட்டோலையின் I ஆம் பத்தியில் குறிப்பிட்டுள்ள அலுவலகப் பணியாளர் சேவை பற்றிய பிரமாணக்குறிப்பின் " எஸ் " பட்டோலை என்பது செய்திமடலில் காலத்துக்குக் காலம் பின்னர் வெளியிடப்படும் அறிவித்தல்களினுல் திருத்தப்பட்டவாறுன 1968 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் தேதிய இல.,14,811/7 ஐக் கொண்ட அதிவிசேடச் செய்திமடலில் வெளியிடப்பட்ட 1968 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் தேதிய அலுவலகப் பணியாளர் சேவை பற்றிய பிரமாணக் குறிப்பின் " எஸ் " பட்டோலையாகும்.

7. இலங்கை (அரசமைப்பு) அரசவைக் கட்டளை 1946 இன் 61 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் ஆக்கப்பட்டு, 1970 ஆம் ஆண்டு பெப்புரவரி மாதம் 13 ஆந் தேதிய இல. 14,893 ஐக் கொண்ட செய்திமடலில் வெளியிடப்பட்ட, 1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் தேதியைக் கொண்ட 192 ஆம் இலக்கக் கட்டளை இத்தால் நிராகரிக்கப்படுகின்றது.

### பட்டோலை

| பத்தி I | பத்தி II |
| --- | --- |
| 1. அலுவலகப் பணியாளர் சேவை பற்றிய பிரமாணக் குறிப்பின் "எஸ்" பட்டோலையில் III ஆம் வகுப்பில் விவரங் கூறப்பட்டுள்ள பதவிகட்கும் காலத்துக்குக்காலம் சேர்க்கப்படக்கூடிய பிற பதவிகட்கும் நியமனஞ் செய்யும் அதிகாரம். | நியமனஞ் செய்யப்படவுள்ள திணைக்களத்தின் தலைவர். |
| 2. ஓர் அமைச்சருக்கு ஒதுக்கப்பட்ட திணைக்களங்கள் சம்பந்தமாக, ஆனல் பொது நிருவாகத் திணைக்களம் தவிர்த்து அலுவலகப் பணியாளர் சேவை பற்றிய பிரமாணக் குறிப்பின் "எஸ்" பட்டோலையில் I, Iஅ, II ஆம் வகுப்புக்களில் விவரங்கூறப்பட்டுள்ள பதவிகட்கும் காலத்துக்குக் காலம் சேர்க்கப்படக்கூடிய பிற பதவிகட்கும் நியமனஞ் செய்யும் அதிகாரம். | குறித்த அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர். சிரேட்ட உதவிச் செயலாளர் பதவி புறம்பாக இல்லாதவிடத்து, அவ் விடயத்திற்குப் பொறுப்பான உதவிச் செயலாளர். |
| 3. பிரதம அமைச்சரின் அலுவலகத்திலுள்ள, அலுவலகப் பணியாளர் சேவை பற்றிய பிரமாணக் குறிப்பில் "எஸ்" பட்டோலையில் I, Iஅ, II ஆம் வகுப்புக்களில் விவரங்கூறப்பட்டுள்ள பதவிகட்கும் காலத்துக்குக்காலம் சேர்க்கப்படக்கூடிய பிற பதவிகட்கும் நியமனஞ் செய்யும் அதிகாரம். | பாதுகாப்பு, வெளிநாட்டு, அலுவல்கள் அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர். |

ජාතික ප්‍රස්තකා...

| பத்தி I | பகுதி II |
|---|---|
| 4. கணக்காய்வு அதிபதியின் திணைக்களத்திலுள்ள, அலுவலகப் பணியாளர் சேவை பற்றிய பிரமாணக் குறிப்பின் "எஸ்" பட்டோலையில் I, Iஅ, II ஆம் வகுப்புக்களில் விவரங் கூறப்பட்டுள்ள பதவிகட்கும் காலத்துக்குக்காலம் சேர்க்கப்படக்கூடிய பிற பதவிகட்கும் நியமனஞ் செய்யும் அதிகாரம். | சிரேட்ட பிரதிக் கணக்காய்வு அதிபதி. |
| 5. தேர்தற் திணைக்களத்திலுள்ள, அலுவலகப் பணியாளர் சேவை பற்றிய பிரமாணக் குறிப்பின் "எஸ்" பட்டோலையில் I, Iஅ, II ஆம் வகுப்புக்களில் விவரங் கூறப்பட்டுள்ள பதவிகட்கும் காலத்துக்குக் காலம் சேர்க்கப்படக்கூடிய பிற பதவிகட்கும் நியமனஞ் செய்யும் அதிகாரம். | தேர்தல் ஆணையாளர். (பாராளுமன்ற, உள்ளூர்ச் சபைகள்) |
| 6. பின்வருந் திணைக்களங்கள் சம்பந்தமாக, அலுவலகப் பணியாளர் சேவை பற்றிய பிரமாணக் குறிப்பின் "எஸ்" பட்டோலையில் I, Iஅ, II ஆம் வகுப்புக்களில் விவரங்கூறப்பட்டுள்ள பதவிகட்கும் காலத்துக்குக் காலம் சேர்க்கப்படக்கூடிய பிற பதவிகட்கும் நியமனஞ் செய்யும் அதிகாரம்—<br>(அ) பொது நிருவாகத்திணைக்களம் ;<br>(ஆ) அமைச்சரவை அலுவலகம் ;<br>(இ) நீதிமுறைச் சேவை ஆணைக்குழு அலுவலகம் ;<br>(ஈ) அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம் ;<br>(உ) பிரதிநிதிகள் சபைத் தலைவர் அலுவலகம் ;<br>(ஊ) பிரதிநிதிகள் சபை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம். | பொது நிருவாகப் பணிப்பாளர் அதிபதி. |
| 7. அலுவலகப் பணியாளர் சேவை பற்றிய பிரமாணக் குறிப்பின் "எஸ்" பட்டோலையில் விவரங்கூறப்பட்டுள்ள பதவிகளையும் காலத்துக்குக் காலம் சேர்க்கப்படும் பிற பதவிகளையும் வகிக்கும் பணியாளர் எவரையும் குற்றத் தீர்ப்புக் காரணம் தவிர்ந்த பிற காரணமாகிய கெட்ட நடத்தைக்காகப் பதவி நீக்கும் அல்லது பிறவாறு தண்டிக்கும் அதிகாரம். | திணைக்களத் தலைவர். |
| 8. அலுவலகப் பணியாளர் சேவை பற்றிய பிரமாணக் குறிப்பின் "எஸ்" பட்டோலையில் விவரங்கூறப்பட்டுள்ள பதவிகளையும் காலத்துக்குக்காலம் சேர்க்கப்படும் பிற பதவிகளையும் வகிக்கும் பணியாளர் எவரையும் குற்றத் தீர்ப்புச் காரணம் நீங்கலாக பிற காரணமெதற்கும் கண்டிக்கும் அல்லது கடுமையாகக் கண்டிக்கும் அல்லது ஒரு கிழமைச் சம்பளத்திற்கு மேற்படாத குற்றந் தீர்த்துத் தண்டிக்கும் அல்லது ஓராண்டுக்கு மேற்படாத காலத்துக்கு ஆண்டேற்றத்தை இடைநிறுத்தும், நிறுத்தும், குறைக்கும் அல்லது பிற்போடும் அதிகாரம். | திணைக்களத் தலைவர். |
| 9. அலுவலகப் பணியாளர் சேவை பற்றிய பிரமாணக் குறிப்பின் "எஸ்" பட்டோலையில் விவரங்கூறப்பட்டுள்ள பதவிகளையும் காலத்துக்குக்காலம் சேர்க்கப்படும் பிற பதவிகளையும் வகிக்கும் இளைப்பாறல் வயதையடைந்துள்ள பணியாளர் எவரையும் இளைப்பாறச் செய்யும் அதிகாரம். | நியமிக்கும் அதிகாரி. |

9–1035

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## சுங்க அறிவித்தல் இல. 61/9/460

(250 ஆம் அத்தியாயமான) அரசிறைப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இடப்பட்டதும் 1961 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் தேதிய 12,781 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 14.3.1962 அன்று பிரதிநிதிகள் சபையினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான கட்டளையின்படி 1970.9.21 திங்கட்கிழமையன்று தொடங்கும் வாரத்தில், ஆர். எஸ். எஸ். தரம் 1 இறப்பருக்கான மதிப்பிடப்பட்ட எவ். ஓ. பீ. பெறுமதியும் ஏதேனும் விவரணத்தையுடைய இறப்பருக்கான ஏற்றுமதித் தீர்வை வீதமும் பின்வருவனவாகும்.

சுங்கக் கட்டளைச் சட்டம் தவிர்ந்த ஏதேனும் எழுத்துமூலமான நியாயப் பிரமாணத்தின் கீழ் ஏதேனும் விவரணத்தையுடைய இறப்பருக்குச் செலுத்தப்படவேண்டிய தீர்வைகளுடன் இத்தீர்வை மேலதிகமானதாக இருக்கும்.

| இறப்பர் | ரூ. ச. |
|---|---|
| ஒவ்வொரு இறாத்தல் ஆர். எஸ். எஸ். தரம் 1 இறப்பருக்கும் எவ். ஓ. பீ. மதிப்பீட்டுப் பெறுமதி | 0 99 |
| ஏதேனும் விவரணத்தையுடைய ஒவ்வொரு இறாத்தல் இறப்பருக்கும் ஏற்றுமதித் தீர்வை | 0 04 |

ஏ. ஈ. பண்டிதரத்தின,
முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளருக்காக.

எனது இல. ஏ. 781,
மா. ம. சுங்கம்,
கொழும்பு, 20, செத்தெம்பர் 1970.

9–1086

## சுங்க அறிவித்தல் இல. 67/3/148

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் இடப்பட்டதும், 1967 ஆம் ஆண்டு நெவெம்பர் மாதம் 22 ஆம் தேதிய 14,775/17 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 1968.2.22 அன்று பிரதிநிதிகள் சபையினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான கட்டளையை ஏற்புடையதாக்கும் நோக்கத்துக்கென இலண்டன் சந்தையிலுள்ள பிலிப்பீன் கொப்பருவுக்கான மதிப்பீடு (தொ. கா. கே.) விலை 1970.9.21 திங்கட்கிழமையன்று தொடங்கும் வாரத்துக்கு, ரூபா 1,210.22 ஆகுமென இத்தால் அறிவித்தல் செய்யப்படுகிறது.

2. கொப்பரு, தேங்காயெண்ணெய், தேங்காய்த் துருவல், உடன் தேங்காய்கள் ஆகியவைக்காகச் செலுத்தப்படவேண்டிய ஏற்றுமதித் தீர்வைகள் பின்வருமாறு :—

| ஒவ்வொரு தொன் கொப்பருவுக்குமான ஏற்றுமதித் தீர்வை | ஒவ்வொரு தொன் தேங்காயெண்ணெய்க்குமான ஏற்றுமதித் தீர்வை | ஒவ்வொரு தொன் தேங்காய்த் துருவலுக்குமான ஏற்றுமதித் தீர்வை | ஒவ்வொரு 1,000 தேங்காய்க்குமான ஏற்றுமதித் தீர்வை |
|---|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 364 08 | 404 76 | 343 74 | 91 02 |

3. சுங்கச் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்து மூலமான நியாயப் பிரமாணத்தின் கீழ் அத்தகைய தென்னம் பொருட்களுக்குச் செலுத்தப்படவேண்டிய தீர்வைகளுடன் மேலதிகமாக இத்தீர்வைகள் இருக்கும்.

ஏ. ஈ. பண்டிதரத்தின,
முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளருக்காக.

எனது இல. 744/22.
மா. ம. சுங்கம்,
கொழும்பு, 1970.9.20.

9–1085

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.